


குருதேவர் ஞாலகுரு சித்தர்
அரசயோகிக் கருவூறர்



மெய்ஞ்ஞானக் கொடி



பிற்காலச் சோழப்பேரரசின் தந்தை
சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறர்

**இந்த இதழில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பற்றி குருதேவர் எழுதிய கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறோம். இதன் மூலமாகவே குருதேவர் நம் தாயினமாம் தமிழினத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் நாம் செய்ய வேண்டிய பணிகள் பற்றி எளிய முறையில் விளக்கி யுள்ளார்.**

## உள்ளுறை



**1. தந்தை பெரியாருக்குப் பின் பகுத்தறிவுப் பணியின் நிலை.....!?!?**
**குருமகா சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் கருவூறர் அவர்கள் செயலாளர், பகுத்தறிவாளர் கழகம், இரவாஞ்சேரி, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம் அவர்களுக்கு எழுதிய விளக்கவுரை.**

**2. அருள்மிகு சொல்லடி நாயனர் பெரியார் ஈ.வெ.ரா. - அருளுலக இருளகற்றிய அறிவுச் சுடரே பெரியார் ஈ.வெ.ரா.!**

**3 சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ.வெ.ரா.**

**4. இந்துமதம் பற்றிய குருபாரம்பரிய வாசகம்**

**5. அருட்போர் பற்றிய விளக்கம்**

தந்தை பெரியார்
ஈ.வெ.ராமசாமி.
அவர்கள்

## தந்தை பெரியாருக்குப் பின் பகுத்தறிவுப் பணியின் நிலை.....!?!?

**குருமகா சன்னிதானம், சித்தர் கருவூரூர் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி ஞாலகுரு அவர்கள் திரு ச. வெண்மணி அழகன், பகுத்தறிவாளர் கழகம், இரவாஞ்சேரி, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம் அவர்களுக்கு எழுதிய விளக்கவுரை.**

நாள்: 26-2-1975
பகுத்தறிவாளர் கழகம்
இரவாஞ்சேரி,
நன்னிலம் தாலுகா

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய துணைப் பேராசிரியர் சித்தர் அவர்களுக்குப் பணிவுடன் எழுதும் மடல்.

தங்களைப் பற்றி என்னுடைய நண்பர் கூறக் கேட்டேன். தாங்கள் குளஞ்சியப்பர் அரசினர் கலைக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணிபுரிவதுடன் மந்திரம் தெரியும் என்றும், அதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சிகள் செய்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருப்பதாகவும், தந்தைப் பெரியாரின் பணி வீணாகக் கூடாதே என்பதற்காக வெளியிட மறுக்கின்றேன் என்றும் கூறியதாகக் கேள்வியுற்றேன். இத்துடன் நிறுத்தாமல் உடற்கூறுகளைப் பற்றி அறிந்த தாங்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி அறிந்த தாங்கள், உடல்நலம் பாதிக்கப் பட்டவர்களைப் பார்த்து, இது செய்வினை, இதை மந்திரத்தால்தான் சரி செய்ய முடியுமே தவிர டாக்டர்களால் ஒன்றும் சரி செய்ய முடியாது என்று கூறுவது 1975-ம் ஆண்டிலேயும் நம்மைப் போன்றவர்களுக்கு நல்லதல்ல.

"மந்திரம் ஒரு மட்டியின் மோசடி வேலை. மந்திரத்தால் ஒரு யானையை வரவழைத்துக் காட்ட முடியுமா? என்றெல்லாம் சரமாரியாக கேள்விக் கணை தொகுத்து மந்திரப் புரட்டுகளை ஒழித்து வருகின்ற இந்த நாட்களிலும் நீங்கள் மந்திரத்தை நம்புவதனால், நீங்கள் செய்துள்ள ஆய்வு சரியானதாக இருந்தால், தயவு செய்து துணிந்து வெளியிடுங்கள். இல்லையென்றால், தயவு செய்து பெரியாரின் கொள்கைக்கு இழுக்கு தேடிக் காட்டாமல், அவர்கள் பெயரை உச்சரிக்காமல் இருந்து விடுங்கள். அதுவே, போதுமானது. முடியுமானால் நிரூபணம் செய்ய எப்போது தயாராக இருக்கின்றீர்கள் என்பதை பகிரங்கமாக அறிவியுங்கள். கற்பனைத் திறத்தால் கதை அளக்காமல்
"பகுத்தறிவை சற்றும் பயன்படுத்தார் - கல்வி மிகுத்ததினால் உண்டோ பயன்"

---- என்பதனை உணர்ந்து நடப்பதுடன், தாங்களின் ஆய்வுத் திரட்டுகளின் அடிப்படை நோக்கத்தினையும், ஆய்வு செய்ததில் கண்ட அற்புத நிகழ்ச்சிக் குறிப்புகளையும் மடல் மூலம் தாங்களிடமிருந்து பெற விரும்புகின்றேன். எனவே, என் அன்பிற்கிரங்கி தாங்கள் மடல் விடுப்பீர்கள் என்ற முழு நம்பிக்கையுடன் மடலை முடிக்கின்றேன்.

தங்களின் மடல் நோக்கும்,
அன்பன்,
ச.வெண்மணி அழகன்,
ஆசிரியர், செயலாளர்,
பகுத்தறிவாளர் கழகம்,
இரவாஞ்சேரி, நன்னிலம் தாலுகா

---

**பகுதி - 1**

சித்தர்
28-2-75

பெறுநர்:
பெருமதிப்பிற்குரிய,
இனிய நண்பர் உயர்திரு ச. வெண்மணி அழகன் அவர்கள்
ஆசிரியர், பகுத்தறிவாளர் கழகம், இரவாஞ்சேரி 609501
நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

உயர்திரு ஐயா,

தங்களின் 26-2-75ஆம் நாளைய பேரார்வம் மிக்க அஞ்சல் இன்று காலை 28-2-75 கிடைக்கப் பெற்றேன். தங்களின் ஆர்வத்தை வீணாக்கி விடக் கூடாது என்பதால், பல்வேறு அலுவல்களுக்கு இடையில் உடன் அஞ்சல் விடுக்கின்றேன்.

நண்ப, தங்களுக்குப் பெற்றோர், உடன் பிறந்தார், குடும்பத்தார் இருப்பின் அனைவர்க்கும் என் அன்பைக் கூறுங்கள். நமது பகுத்தறிவாளர் இயக்க உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் என் அன்பைக் கூறுங்கள். நமக்குள், அஞ்சல் மூலம் கருத்துப் பரிமாறிக் கொள்வோம். பிறகு, வாய்ப்பு ஏற்படும் போது நேரில் சந்திப்போம். நமது நட்பு வளரட்டும். அது, நம் மொழி, இனம், நாடு ஆகிய மூன்றும் தூய்மை பெற, உயர்வு

பெற, உய்வு பெற உலகளந்த புகழ் பெறப் பாடுபடும் வண்ணம் அமையட்டும்.

'ஒரு கருத்து அல்லது செய்தி (a thought or idea and an information) நம் நாட்டில் படித்தவர்களால் கூட உண்மை வடிவில் பரப்பப் படுவதில்லை. இன்றைய செய்தித் தாள்களும், தங்கள் தங்களுடைய கருத்தை இணைத்தே செய்திகளை (News with the views of the papers) வெளியிடுகின்றன. அதனால்தான் தந்தை பெரியார் அவர்கள், "இந்தப் பத்திரிகைக் காரன்களை நான் நம்பறதில்லீங்க" என்று அடிக்கடி கூறிட்டார். எனவேதான், தனது தள்ளாத வயதிலும், தந்தை பெரியார் அவர்கள் கடும் வெயிலிலும், கொடும் பனியிலும் இரவுபகலாக நாடு முழுதும் சுற்றிப் பகுத்தறிவுப் பணி செய்திட்டார். அவர், நம் மக்களின் அறியாமையும், அவசரமும், கற்பனையும், கதை சுவைக்கும் பண்பும் தன் பணியை வீணாக்கி விடக் கூடாது என்பதற்காகத்தான் அரும்பாடுபட்டார்.

அரசியல் வரலாற்றுப் படி, 'ஜின்னா', தனிநாடு, 'பாகிசுத்தான்' (Pakistan) கேட்கும் முன்னரே தந்தை பெரியார் திராவிட நாடு கேட்டார். ஆனால், ஏன் அவர்; தனி நாட்டுப் போராட்டத்துக்காக எண்ணற்றோர் இரத்தக் கையெழுத்துப் போட்டு படை வீரர்களாகச் சேர்ந்தும், 'திராவிட நாட்டுக் கோரிக்கை'யைக் கைவிட்டார்?

அவர், "இந்தப் பசங்க, இன்னும் பார்ப்பான் காலைக் கழுவித் தண்ணீர் குடிக்கிறானுங்க. இவனுங்க தனி நாடு அடைஞ்சாப் பழைய ராசாக்கள் மாதிரிப் பார்ப்பானுக்கு அடிமையாயிருக்கிறவனும், பயந்து சாகிறவனும்தான் நாடாளுவானுங்க. அப்புறம் பார்ப்பான் எதுக்கெடுத்தாலும், 'வேதத்தில் சொல்லியிருக்கு, மனுஸ்மிருதிகளில் சொல்லியிருக்கு'ன்னு எல்லாரையும் ஏமாத்திப் பணம் பறிச்சுப் பிழைப்பான். தமிழன், நாலாஞ்சாதியாய், சூத்திரனாய், தேவடியா மகனாய்த்தான் இருக்கணும், அதனாலே, தோழர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! முதலில் பார்ப்பானை ஒழிக்கணும். சாத்திரம் சம்பிரதாயம் சடங்கு அது இதுன்னு தமிழன் தன் பணத்தைப் பாழாக்கிப் பார்ப்பான் காலிலே விழுவதைத் தடுக்கணும். தமிழனுக்குத் தன்மான உணர்வு, சுய மரியாதை உணர்வு.... எல்லாம் ஏற்பட்ட பிறகுதான் தனிநாடு கிடைக்கணும். அதுவரை எனக்கு அரசியலைப் பற்றிக் கவலையில்லை. யாரு மந்திரியா வந்தாலும் எனக்கு அக்கரையில்லை. தமிழன் தன் இனத்தை மதிக்கணும்" - என்று இப்படித் தெளிவாகப் பேசினார்.

"கடவுள் இருக்கோ இல்லையோ, எனக்குக் கவலையில்லை. பார்ப்பான் மட்டும் ஏன் பூசாரியாக இருக்கணும்? சமசுக்கிருதத்தில் மட்டும் ஏன் மந்திரம் சொல்லணும்? தமிழன் ஏன் சாமிக்குப் பக்கத்திலே கருவறை வரை போகக் கூடாது?......" என்று சமயச் சீர்திருத்தம் பேசிய வெண்தாடி வேந்தர் சிந்தனைச் சிற்பி, சிறைக்கஞ்சாச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன், சீர்திருத்தச் செம்மல், தமிழினத் தலைவர், தந்தைப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், தனது முதுமையை உணர்ந்தார்.

உடனே, அவர், "உலக்கைக்குப் பூண் செதுக்க ஆரம்பித்தால்தான், அது உளிக்காவது ஆகுங்க. அவனவன் கத்தி வச்சுக்க, தீப்பந்தம் வச்சுக்க. பெட்ரோல் வச்சுக்க. நான் சொல்லுவேன், பார்ப்பான் குடுமியை வெட்டு, பூணூலை அறு, அக்கிரகாரத்தில் பெட்ரோலை ஊற்றி நெருப்பை வைத்திடு..... அப்போதுதான் பார்ப்பான் கீழே இறங்கி வருவான். மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடாது...." என்று பேச ஆரம்பித்தார்.

மாவீரர் பெரியார் அவர்கள், இப்படியெல்லாம் தன்னலமற்றுப் பகுத்தறிவுப் பணி புரிந்தும் தமிழர் விழிக்க வில்லை. விழித்து எழாதவர்களைத் தட்டியெழுப்ப நினைத்தார், வைக்கம் வீரர் தந்தை பெரியார். உடனே,

**"கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்**
**கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி**
**அதைப் பரப்புகிறவன் அயோக்கியன்**
**கடவுள் இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!"**

என்ற கொள்கை முழக்கத்தை வெளியிட்டார்.

எனதருமை நண்பா! உன் போன்ற ஆர்வம் உடையவர் ஒருவர் இருவராவது தந்தை பெரியாரிடம் நேரடித் தொடர்பு கொண்டிருந்தால் ஏதேனும் பயன் விளைந்திருக்கும். அப்படிப் பயன் விளையவே இல்லாமல் செய்தது தமிழரின் பண்பான 'அடக்கம்', 'பொறுமை', 'விட்டுக் கொடுத்தல்', 'ஏற்றல்', 'காத்திருத்தல்' .... முதலியவைதான். இலைமறை காயாகவே தங்களைப் போல் பலர் இருந்து விட்டனரே!...?

நண்பா! படித்தவர்கள், இன்னும் ஐம்பது விழுக்காடு (50%) கூட ஏற்படாத இந்தத் திருநாட்டில் தந்தை பெரியார் ஆற்றிய பணி, சாதித்துள்ள சாதனை, ஈடு இணையற்றது, நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்று.

பார்ப்பான் அக்கிரகாரத்தில் தமிழன் மேல் துண்டும் செருப்பும் போட்டு நடக்க முடியாது, நடக்கக் கூடாது என்ற பார்ப்பனியச் சட்டம் இருந்தது. அந்தத் தமிழகத்தை, இன்று

தமிழனே, "எங்கும் தமிழர்! எதிலும் தமிழ்!! எல்லாம் தமிழ்!!!" என்று செங்கோல் ஓச்சும் நிலைக்கு உரியதாக ஆக்கிய பெருமை தந்தை பெரியாருக்கே உரியது. கடைசித் தமிழன் உயிரோடு உள்ள வரை தந்தை பெரியாரின் புகழ் வாழும், வளரும்.

நண்பா! தந்தை பெரியார் மட்டும் தோன்றியிருக்கா விட்டால்; பார்ப்பனன் 'ஒவ்வொரு தமிழனும் அவனுடைய நெற்றியில் தன்னுடைய சாதிப் பெயரைப் பச்சை குத்திக் கொள்ள வேண்டும்' என்றே சொல்லியிருப்பான். இவ்வளவு செயற்கரிய செய்த பெரியாரின் தொண்டினை, கருத்தை, கொள்கையை, சாதனையை ... இன்னும் படிப்பறிவில்லாததால் உணராமலிருக்கும் தமிழனிடம் எனது ஆய்வுக் கருத்துக்கள் கூறப்பட்டால்; அது தவறான, பயனற்ற, முரண்பாடான, வேறான, விரும்பத் தகாத பயன்களை நல்கிடும் என்றுதான் நான் கூறி வருகிறேன்.

நான் 'மந்திரங்களை அப்படியே நம்ப வேண்டும்' என்று கூறவில்லை. Sound Waves ஒலி அலைகள், Vibration ஒலி அதிர்வுகள், Musical Notes இசை இயல்பு ஒலிகள் .... முதலியவை healing the wound புண்ணைக் குணப்படுத்தல் Nervous Disability நரம்புத் தளர்ச்சி, Mental Disorders மூளைக் குழப்பம் .... முதலியவைகளை நலப் படுத்தல், depression தாழ்வு உணர்ச்சி, ...... and frustration சலிப்புணர்வு, வெறுப்புணர்வு, cowardist கோழை நிலை .... முதலிய இன்னோரன்ன பல நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைதான், கோயில்களில் திருவாசகம், தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ், அருட்பா .... முதலியவற்றின் ஒலிகளாகவும், நாயனம், மத்தளம், ஒத்து, தாளம், கோடாங்கி, உடுக்கை, பம்பை, கொம்பு, தாரை, தப்பட்டை..... முதலியவைகளாகவும் பயன்பட்டன என்றும்;

சங்க காலத்தில் வீரர்களுக்கு நடுகல் (Tomb Stone) நடப்பட்டு ஏற்பட்ட வீர வழிபாடு (Hero Worship)தான், பத்தினி வழிபாடுதான் (Sakthi Cult) நமது சமய வழிபாடுகளாக வளர்ந்தன. மன்னர்கள், வீரர்கள், சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், பத்தினி பெண்டிர்கள்.... புதையுண்ட இடமே கோயில். அதாவது, முன்னோர் வழிபாடே (Ancestors Worship) நமது சமயம். இன்று பெரியாருக்கு விழாக் கொண்டாடுவது போல் இத் திருநாட்டைப் புகழ் மணக்கச் செய்து கருத்தாலும், செயலாலும் ஆண்டு சென்ற 'ஆண்டவர்கள்' (one who ruled) பெயரால் அவர்களுக்கு விழாக் கொண்டாடுவதுதான் திருவிழா. 'கோயிலில் இருக்கும் கற்சிலைகளுக்கு மாலை போடுவதும், சுண்டல் படைத்துச் சிறுவர்களுக்கு வழங்குவதும் தவறு என்றால்; தந்தை பெரியார் படத்துக்கு மாலை போடுவதும், படத்தை ஊர்வலமாகத் தூக்கி வருவதும், பெரியார் பிறந்த நாளில் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதும் தவறுதான்' - என்றுமே கூறி வருகிறேன். இது பகுத்தறிவில்லையா?

நண்பரே! தந்தை பெரியாரே சித்தர்களின் பாடல்களிலிருந்துதான் நாத்திக வாதத்தைக் கடன் வாங்கினார். சுவாமி கைவல்யத்தின் தயாரிப்புத்தான் தந்தை பெரியார். தந்தை பெரியாரை முழுக்க முழுக்க ஒத்துக் கொள்ள முடியாத நிலையில்தான் குத்தூசி சா.குருசாமி வெளியேறிப் பகுத்தறிவுக் கழகம் அமைத்தார்.

குத்தூசியார் நடத்திய 'குத்தூசி' என்ற மாத இதழில் அவரே என்னை 'மத ஆய்வாளர் ப.கி., ப.கிருட்டிணமூர்த்தி' என்று அறிமுகம் செய்து மூன்று கட்டுரைகளுக்கு மேல் வெளியிட்டுள்ளார். சித்தர்களை விடச் சிறந்த பகுத்தறிவு வாதிகள் உலகில் தோன்றியதில்லை. தோன்றவும் முடியாது, முடியவே முடியாது.

நான் மந்திரவாதி இல்லை. மதவாதி அல்ல. மிதவாதி அல்ல. ஒரு நூறு நூல்களுக்கு மேல் எழுதி வைத்திருப்பவன். குத்தூசி போன்ற உண்மைப் பகுத்தறிவாளர்களுக்கு வாரிசாக இருப்பவன்.

'எதையும் கண்ணை மூடிக் கொண்டு மறுப்பதும் தவறு, நம்புவதும் தவறு; முறையாக ஆராய்ந்து கூறுவதே நன்று' என்ற கொள்கை உடையவன். 'மதம் என்பது வெறும் மாயங்களால், மந்திர தந்திரங்களால், தேர்த் திருவிழாக்களால் ஆகியது' என்று எண்ணும் பகுத்தறிவு தவறான பகுத்தறிவு.

'ஓர் இனத்தின் உண்மையான வரலாறே மதம்' என்பதே என் கருத்து. நண்பரே! இன்னும் சொல்லப் போனால்,

'மனித குலத்தின் வரலாற்றைக் கூறுவதுதான் மதம்'

'கோவில் என்பது அண்டத்தை விளக்கும் பொருட்காட்சி சாலை'

'ஆரம்பக் காலத்தில் குறிப்பிட்ட மதம் குறிப்பிட்ட இன நாகரிகத்தை அக்காலக் கட்டத்தில் விளக்கும் கலைக் களஞ்சியம்'

என்ற அடிப்படைக் கருத்துக்களையே எனது நூல்கள் விளக்குகின்றன.

நண்பா! மந்திர மாயங்களை நான் விரும்பவில்லை, வற்புறுத்த வில்லை; ஆனால், அவையெல்லாம் என்ன? என்று ஆராய்ந்து வரும் பகுத்தறிவு வாதியே நான். அறிவின்

பெயரால், எதையும் ஆராய வேண்டும் என்ற கொள்கையுடையவனே நான். 'எனது, ஆராய்ச்சி முடிவுகளை அதிகப் படிப்பறிவில்லாத நமது தாயக மக்கள் தவறுதலாகப் புரிந்து கொண்டு விட்டால்; தந்தை பெரியாரின் அரை நூற்றாண்டு காலப் பகுத்தறிவுப் பணி வீணாகிவிடும்' என்ற கருத்தைத் தான் திருத்தமாக விளக்கி வருகின்றேன் நான். அதைத் தவறுதலாகப் புரிந்து கொண்டு தங்களைப் போன்று சிலர் தொடர்பு கொள்கிறார்கள்.

நண்பரே, தங்களைப் போன்ற ஆர்வமுள்ள சிலராவது உதவிட முன் வந்தால், தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பணி அணி பெற, துணை பெற, நிலைத்து நிற்க, பெரிய பயன் விளைவிக்க என் ஆராய்ச்சிகள் விரைவில் நூல்களாக வெளிவரும்.

தந்தை பெரியார் நம் சமுதாயம் கரடுமுரடான காடாக இருப்பதை அறிந்தார். காட்டை அழித்தார். பெரிய பெரிய கற்பாறைகளை வெடி வைத்துத் தகர்த்தார். அவ்வளவோடு அவர் வாழ்வு முடிந்தது. இனிமேல் தான், உண்மையான பணி இருக்கின்றது. முட்புதர்களை, பயனற்ற செடி கொடிகளை வெட்டியும், எரித்தும், சிறுசிறு கற்களை அகற்றியும், கிணறு தோண்டியும், ஆற்றுநீர் ஏரிநீர் கொணர்ந்தும், வரப்புகள் கட்டியும், வாய்க்கால்கள் வெட்டியும் நல்ல கழனிகளை, நஞ்சைகளை உருவாக்கும் சமுதாயப் பணியும் கடமையும் நமக்குத்தான் உண்டு.

நாம், சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும் விரைந்து, குறுகிய காலக் கட்டத்துக்குள் மிகப் பெரிய அளவில் செயல்பட்டிட்டால்தான்; தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வினால் ஆற்றப்பட்ட தன்னலமற்ற தொண்டின் பயனால் நம் சமுதாயம் என்னும் காடு பெற்றிட்ட மிகப் பெரிய சீர்திருத்தம் நல்ல கழனிகளெனும் பயனடைய நிலையேற்படும். அதற்காக, யாரேனும் கிடைக்க மாட்டார்களா? என்ற ஏக்கத்தில்தான், தனிமையெனும் கொடிய பாலையில் நெடிய பயணத்தைத் துவக்கிட்டேன். நீங்கள் பாலைவனச் சோலையாகக் கிடைத்துள்ளீர்கள். (You are an Oasis). உங்களை நான் இழக்கவே மாட்டேன். நீங்கள் ஒருவர் எனக்குத் துணையாகக் கிடைத்தால் கூடப் போதும். நான், பல அரிய பெரிய உயரிய சீரிய பணிகளை விரிவாகவும், விரைவாகவும் செய்திடுவேன்.

நண்பா! உன் கொள்கைப் பற்றே என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது. உன் புகைப்படம் இருந்தால் உடனே அனுப்பு. உன் குடும்பத்தார், உறவின் நிலை, நண்பர்கள்... பற்றி விரிவாக எழுது. உன்னை எனது உயிருக்குயிரான நண்பனாக ஏற்கிறேன். எனது நண்பர்களை உனக்கு அறிமுகப் படுத்துகிறேன். நான் சொல் வீரனல்ல; செயல் வீரன் (A man of Action).

நான் எனது குறிக்கோள்களை (Mottos), கொள்கைகளை (Principles), திட்டங்களை (Plans and Schemes), ... மிகத் தெளிவாக எழுதி முடித்துள்ளேன். கார்ல் மார்க்சும், ஏங்கல்சும் கம்யூனிசக் கொள்கையை இலக்கியமாக (Capitalism, Marxism, Religion and Science, Colonialism.... etc) எழுதிப் பல நூல்களாக வெளியிட்டதால்தான், இன்று உலகில் பாதிக்கு மேல் அவர்களின் கருத்து ஆளுகிறது. எனக்கு கொள்கைத் தெளிவு, குறிக்கோள் நம்பிக்கை, செயல்திறம், ஆர்வ உரம், .... ...... ..... தமிழர்கள் மறப்பதற்குள்ளேயே நாம், நம் அறிவுப் பணியைத் தொடர வேண்டும்.

1. சாதிகள் எப்படித் தோன்றின? ஏன் தோன்றின? எவரெவரால் வளர்ந்தன? அவற்றை அழிக்க முயன்றவர்கள் யார்? யார்? அவர்களெல்லாம் வெற்றி பெறாததற்குக் காரணம் என்ன? சாதிகளை ஒழிக்க முடியுமா? முடியாதா? பெரியார் பெற்ற நிலை என்ன? பெரியாரின் பணி சாதியைப் பொறுத்தவரை தொடருமா?
2. கோவில்கள், பூசைகள், விழாக்கள், சமய இலக்கியங்கள்.... எப்படிப் பிறந்தன? எவ்வாறு வளர்ந்தன? அவற்றை எதிர்த்து மறுத்து அழிக்க வேண்டுமா? வேண்டாமா? அது முடியுமா? முடியாதா? அது பயன் தருமா? தராதா? மாவீரர் பெரியாரின் கோவில் எதிர்ப்புப் பணியின் விளைவுகள் என்ன? இனி விளைவு என்ன?
3. ஆரிய ஆதிக்கம், வேத நெறி, வடமொழி (Sanskrit), பார்ப்பன உயர்வு .... முதலியவை எப்படித் தோன்றின? எவ்வாறு வளர்ந்தன? இவற்றை அழிக்க முடியுமா? முடியாதா? தந்தை பெரியாரின் அஞ்சா நெஞ்சம் தொடுத்த போரின் முடிவு என்ன? பின் விளைவு என்ன?
4. பெரியார் ஈ.வெ.ரா.வின் பணியால் சாதி ஒழிந்ததா? கோயில்களில் கூட்டம் குறைந்ததா? மந்திர மாயையில் உள்ள நம்பிக்கை நலிந்ததா? நசிந்ததா? பார்ப்பனர்கள் இழிந்தார்களா? பகுத்தறிவு வளர்ந்ததா?..... அவருக்குப் பின் அவரது பணி நிலைக்குமா? அவரைக் கடவுளாக்கிடுவார்களா? உலகம் அவரை உணருமா?

5.தமிழ்மொழித் தூய்மை, செம்மொழி நிலை தமிழகத்தில் வளர்க்கப் படுமா? முடியுமா? தமிழினம் சாதி சமயங்களை விடுத்து ஒற்றுமைப்படுமா? முடியுமா? சமதர்மம் மலருமா? பகுத்தறிவு வளருமா?

6.பகுத்தறிவு சொன்ன புத்த மதமும் சமண மதமும் அழிக்கப் பட்டது போல்; பெரியாரின் கொள்கை அழிக்கப் படாதா? அழிக்கப் படுமா? பெரியார் நெறி மதமாகுமா? இந்துமதத்தால் விழுங்கப் படுமா?

நண்பா! பகுத்தறிவு நிலையில் நாம் சிந்திப்போம். இந்த அஞ்சலையே ஒரு சிறு நூலாக வெளியிட்டு அச்சிட்டுச் சில நூறு பிரதிகள் எனக்கு அனுப்பி வையுங்கள்.

வாழ்க பெரியார்!
வளர்க பகுத்தறிவு!
குத்தூசி குருசாமி அவர்களின் கனவு நனவாகுக!
தமிழ்ப் பற்று செழிப்புறுக!
தமிழ் தூய்மை பெறுக!
தமிழன் இன உணர்வு பெறுக!
தமிழ்நாடு ஒற்றுமை பெறுக!
அறிவே நம் நெறி!
அன்பே நமது போர்வாள்!
தமிழின் செழுச்சியே போர் முயற்சி!

---

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**
**-- திருமூலர் திருமந்திரம்**
**(திருமந்திரம், பாயிரம், திருமூலர் வரலாறு, பாடல் 9)**

## பகுதி - 2

பேரார்வத்துக்குரிய இனிய நண்பர் உயர்திரு ச.வெண்மணி அழகன் அவர்களுக்கு,

பெருமதிப்பிற்குரிய ஐயா,

தங்களின் அஞ்சல் கண்டவுடனேயே விரிவான அஞ்சல் எழுதினேன். ஆனால், சென்னை செல்ல நேரிட்டு விட்டதால், இன்றுதான் அனுப்ப முயன்றேன். தங்களுக்கு எழுதியதை ஒருமுறை படித்ததும், இன்னும் சில வாசகங்கள் எழுதுவது நல்லது என்று தோன்றவே இந்த இணைப்பு அஞ்சலையும் எழுதுகிறேன். நாம், நல்ல சிந்தைத் தெளிவுடன் நண்பர்களாவோம்.

நண்பா! தமிழர்களின் தன்னிகரில்லாத் தலைவர் தந்தை பெரியார் அவர்களேயாவார். அஞ்சா நெஞ்சமும், அயரா உழைப்பும், அடங்கா ஆர்வமும், அளப்பரிய செயல்திறமும் படைத்த வைக்கம் வீரர் பெரியார் ஒருவரால்தான் தொடர்ந்து அரை நூற்றாண்டுக் காலம் ஆரிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட முடிந்தது. அவர் முழு வெற்றி பெற்றாரா? இல்லையா? என்று ஆராயத் தேவையில்லை. அவரால், பல அரிய பெரிய உயரிய சாதனைகள் சாதிக்கப் பட்டுள்ளன என்பதை யாருமே மறுக்க முடியாது மறக்க முடியாது.

இன்று தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு.... என உணர்வுகள் செழித்து வளர்ந்தோங்கி வருவதற்குக் காரணமே தந்தை பெரியார்தான். ஆனால், அடிப்படை முயற்சிகள் மட்டுமின்றி, முக்கால் பங்குக்கு மேல் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகள் அவரால் விதைக்கப் பட்டும், விதைத்தவை முளைத்தும், முளைத்தவை கிளைத்தும் போதுமான தேவையான பாதுகாப்பும் போற்றுதலும் பேணுதலும் இன்றி அவை உரிய விளைவைத் தரவில்லை என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அப்பொழுதுதான், இனிமேல் என்னென்ன செய்ய வேண்டும்? எப்படி யெப்படிச் செய்ய வேண்டும்? என்றெல்லாம் திட்டமிட்டுச் செயல்பட முடியும்.

நண்பா! 'தந்தை பெரியார் அவர்களுக்கு எண்ணற்ற மாவீரர்கள் தொண்டர்களாகக் கிடைத்தும், பெரும்பொருள் - ஏறத்தாழ ஒரு கோடி மதிப்புள்ளது - காணிக்கையாகக் கிடைத்தும், பட்டுக்கோட்டை அழகிரி, குத்தூசி சா.குருசாமி.... முதலியோர் கிடைத்தும் .... நாடு தழுவிய மிகப் பெரிய சீர்திருத்தங்களைச் செய்யாமல் போய்விட்டாரே' - என்பதுதான் என் போன்றோர் வருத்தம்.

நண்பா! 'நா அசைந்தால் நாடே அசையும்' என்ற புகழ் பெற்ற வெண்தாடி வேந்தர், தன் பொன்னான வாயைத் திறந்து - 'போர்' என்று ஒரு முறை கூறியிருந்தால் போதும்; என்றோ! நமது சமுதாய அடிமை, மிடிமை, இருள், இழிவு, முடக்கம், இன்னல் .... முதலிய அனைத்தும் அழித்தொழிக்கப் பட்டிருக்குமே! இறுதிவரை, அவர் பேசியபடியே தன் காலத்தைக் கழித்து விட்டாரே! அவர் நினைத்திருந்தால் ஒரு லெனினாக, வாசிங்டனாக, கரிபால்டியாக, காந்தியாக மாறியிருக்கலாமே! இந்தத் திருநாட்டுக்கு விடிவையளிக்கக் கூடிய முடிவு எதையுமே செயலாக்காமல் சென்று விட்டாரே!..... என்றுதான் என் போன்றோர் வருந்துகிறோம்.

எங்களுடைய இத்தகைய வருத்தத்தை உரிய முறையில் உங்களைப் போன்றோர்

புரிந்து கொண்டால்தான் இனித் தொடர இருக்கும் பகுத்தறிவுப் பணியில் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயல்பட முடியும்.

நண்பா! நாம் சிந்தையில் பிறக்கும் கருத்துக்களால் மாறுபட்டவர்களாக, வேறுபட்டவர்களாக இருக்கலாம். ஆனால், நெஞ்சத்து உணர்வுகளால் ஒன்றுபட்டவர்களாக இருக்க வேண்டும். அதாவது, தமிழர்களில் கருத்தால் எதிர்க் கட்சிகள் இயங்கும் நிலை இருக்கலாம். ஆனால், உணர்வால் எதிரிக் கட்சிகள் இயங்கும் நிலை இருக்கக் கூடாது.

நண்பா! பலர் 'பகுத்தறிவுக் கொள்கை' (Rationalism) என்பது தந்தை பெரியாரால் முதன்முதலில் ஈன்றெடுக்கப் பட்ட ஒன்று என்று எண்ணுகிறார்கள். அது மாபெரும் தவறு. என்றைக்கு மனிதன் சிந்திக்க (thinking) ஆரம்பித்தானோ! அன்றே மடமை பிறந்து விட்டது. (belief).

இதை உணர்ந்தால்தான் நாம் பகுத்தறிவுப் பாதையில் உள்ள எல்லைக் கற்கள் (milestones) எத்தனையாயிரம் என்று எண்ண முடியும். தந்தை பெரியார் பகுத்தறிவுப் பாதையில் உள்ள எண்ணற்ற எல்லைக் கற்கள் போன்றவரல்ல. அவர், ஒரு வழிகாட்டி மரமாகவும் (Guiding Post), வழி நடைப் பயணிகள் தங்கி இளைப்பாறி இனமாக உணவுண்டு, ஓய்வெடுத்துப் பயணப்பட உதவும் விருந்தினர் மாளிகையாகவும் (Guest House) தொடர்ந்து பயணப்படப் போகும் இடம் பற்றிய விளக்கங்கள் வழங்குபவர். அதனால்தான், உலகப் பகுத்தறிவாளர்களின் வரிசையிலே தந்தை பெரியார் ஈடு இணையற்ற மிகப் பெரிய தனித்த இடத்தைப் பெறுகிறார். ஆனால், புத்தர், மகாவீரர், இயேசு, கன்பியூசியசு, சொராசிட்டர், முகம்மது நபி, குருநானக்கு, .... முதலியோர் போன்று இவரும் ஒரு மதத் தலைவராக ஆக்கப் படாமலிருக்க வேண்டும். அதற்குரியதைச் செய்வதே பகுத்தறிவு இயக்கத்தின் கடமையாகும்.

நண்பா! எனக்கு ஓய்வும் வாய்ப்பும் அதிகமில்லை என்பதால் அஞ்சலை இத்துடன் முடிக்கிறேன். பகுத்தறிவு இயக்கம் முதலில் பல நல்ல நூல்களை வெளியிட வேண்டும். அதாவது, இங்கர்சால், மார்க்சு, ஏங்கல்சு, லெனின், பெர்ட்ராண்டு ரசல்,... முதலியோரின் கருத்துக்கள் உலகம் முழுதும் உணரப் படும் வண்ணம் நல்ல பல நூல்களாக வடிவம் பெற்றது போல், தந்தை பெரியாரின் கொள்கைகள், பணிகள், வாழ்வியல் முறைகள் .... முதலியவை என் போன்று பலராலும் நூல்களாக எழுதப்பட வேண்டும்.

தங்களைப் போன்றோர் உணர்வு வயப் படாமல், உடனடியாக எதிர்ப்பு, மறுப்பு, வெறுப்பு, பழிப்பு, அழிப்பு.... வேலைகளில் ஈடுபடாமல் பொறுமையோடு, பிறர் கூறும் கருத்துக்களைக் கேட்க வேண்டும். பிறர் செய்யும் முயற்சிகளைத் தடுக்காமல் உன்னிப்பாகக் கவனித்து வளர்க்க வேண்டும்.

தந்தை பெரியார் ஒவ்வொரு கட்டத்திலும், "தாய்மார்களே! பெரியோர்களே! தோழர்களே! .... நான் சொல்லுவதை நீங்களெல்லாம் பொறுமையாகக் கேட்டுச் சிந்தித்துப் பார்க்கணும்னுதான் நான் உங்களையெல்லாம் மறுபடியும் மறுபடியும் மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்குச் சரியென்று பட்டதை ஏற்றுக் கொள்ளுங்கள். மற்றதை விட்டு விடுங்கள். நீங்கள் எதையும் நம்ப வேண்டாம். நம்பளையெல்லாம் சூத்திரனாய், தாசிமகனாய், காட்டுமிராண்டியாய்.... கதையெழுதி வச்சிருக்கானுங்க, இந்தப் பார்ப்பானுங்க. இதைப்பற்றி நான் கேட்கக் கூடாதா? சொல்லக் கூடாதா? என்னை விட்டா வேறே நாதி கிடையாது. என் காலத்திலேயே இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டணும்னு தான் நான் அலையறேன். புராணம், இதிகாசம்னு.... ஆபாசங்களை யெல்லாம் கடவுள் கதையா எழுதி வச்சிருக்கானுங்களே! இதைப் படித்துவிட்டு நமது படித்த தமிழன்களும் காட்டு மிராண்டிகளாக வாழறாங்களே! என்பதுதான் என் வருத்தம்.

அதற்காகத்தான் 'பகுத்தறிவுக் கொள்கை', 'பகுத்தறிவு இயக்கம்' .... அது இதுனு என்னாலே முடிஞ்சதையெல்லாம் செய்யறேன். நீங்க எல்லாரும் வருத்தப் படாம சிந்தித்துப் பார்க்கணும். இது பல ஆயிரம் வருடமா நடக்கற மோசடி! ஏமாத்து!! பித்தலாட்டம்!!! அயோக்கியத்தனம்!!!!... இதையெல்லாம் என் காலத்துக்குள்ளேயே ஒழிக்க முடியாது என்றாலும் ஏதோ பலபேரு எனக்குப் பின்னாலே தொடர்ந்து முயற்சி செய்தாவது இவற்றை யெல்லாம் ஒழிக்கணும்.

நம்மையெல்லாம் ஏமாத்திப் பிழைக்கிறவன், சுரண்டிப் பிழைக்கிறவன், அண்டிப் பிழைக்கிறவன்தான், பார்ப்பானுங்க. அவனுக்கு ஏன் சாமீ! சாமீ!!ன்னு மரியாதை கொடுக்கணும். அவன் காலைக் கழுவித் தண்ணீர் குடிக்கணும்...

இதையெல்லாம் தோழர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! நீங்க நல்லாச் சிந்திக்கணும்.... பொறுமையாகச் சிந்திக்கணும். எல்லோரும் ஒன்னாச் சேர்ந்தால்தான் பார்ப்பானை ஒழிக்க முடியும்.... நான் கருத்துச் சொல்ல உரிமை உண்டு. இந்தப் புராணம், இதிகாசம், திருவிழா, கோயில், கடவுள்

எல்லாம் இருக்கணுமா? வேணுமா? தேவையா?.... என்பதை நீங்கதான் சிந்தித்து முடிவு கட்டணும். உங்களைச் சிந்திக்க வேணும், சிந்திக்க வேணும்னு கேட்டுக்கறேன்...." என்று இப்படித்தான் தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பணியின் நிலை என்ற தலைப்பிலேயே என் போன்றோர் சிந்திக்கிறோம்.

அதனால், இன்றுள்ள பகுத்தறிவாளர்கள் இயக்கம், அடிக்கடி 'கருத்தரங்குகள்', 'மாநாடுகள்' நடத்த வேண்டும். இனமாகப் பல நூல்களை அச்சடித்து வழங்க வேண்டும். தந்தை பெரியார் பற்றியும், பகுத்தறிவுக் கொள்கை பற்றியும் யார் நூல் எழுதிக் கொடுத்தாலும், அதை ஏற்றுப் போற்றி உரிய ஆதரவைக் கொடுத்து வெளியிட வேண்டும். உலகம் தழுவிய நாளிதழ், வார ஏடு, திங்கள் மலர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பகுத்தறிவுக் கொள்கைக்காக வெளியிடல் வேண்டும். பிறகு பல மொழிகளிலும் பகுத்தறிவுக் கொள்கை விளக்க இதழ்கள், ஏடுகள், மலர்கள் வெளியிடப் படல் வேண்டும்.

மதுவும் மங்கையும் இறைச்சியும் மிக விரும்பப்பட்ட சங்க காலத்தில்தான் திருவள்ளுவர் வாழ்ந்தார் என்பதை எண்ணிப் பாருங்கள். அப்போதுதான், 'முல்லையே மலராதே', 'முழுநிலாவே ஒளிராதே!' என்பது போல், என் போன்றோரின் சிந்தனைகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் தடை விதிக்க மாட்டீர்கள். பெரியார் காலத்தில் என் போன்றோரும் வாழத்தான் முடியும். அதுவே இயற்கை. தமிழ் மொழி வழிச் சிந்தனைகள், ஆராய்ச்சிகள் பூத்துப் புதுமணம் பரப்ப, காய்த்துக் கனிந்து விருந்தாக நாமனைவரும் பாடுபடல் வேண்டும்.

நான், சித்தர்களின் 'சித்தாந்தம்' என்ற ஒரு மாபெரும் உலகத் தொன்மைமிகு தத்துவத்தின் வாரிசு, பிரதிநிதி. மந்திரவாதி அல்ல. என் கருத்துக்களை, கொள்கைகளை, சிந்தனைகளைப் பொறுமையோடும் மலர்ந்த முகத்தோடும் ஏற்றுச் சிந்திக்கத் தயாராக இருங்கள். ஆரம்பத்திலேயே கசப்புணர்வும், மறுப்புணர்வும், வெறுப்புணர்வும், பகையுணர்வும் கொள்ள வேண்டாம். நாம் ஆறறிவு படைத்த மனிதர்கள்.

ஒரு புதிய சிந்தனையை யாரும் அழிக்க முடியாது. பகுத்தறிவுக் கொள்கையின் பிறப்பிடமும், இருப்பிடமும் சித்தாந்தமே என்ற நினைவோடு பகுத்தறிவாளர்கள் செயல்பட வேண்டுமென்று அன்பு வேண்டுகோள் விடுத்துக் கொள்ளுகிறேன். நாம், என்றும் நண்பர்களாக இருப்போம்.

அன்பு
சித்தர்

---

# அருள்மிகு சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா. 64வது நாயனாராகத் திருஅவதாரம் செய்த தமிழின உணர்வை ஊட்டிய சொல்லடி நாயனார் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அருளுலக இருளகற்றிய அறிவுச் சுடரே பெரியார் ஈ.வெ.ரா.!

**பத்தாவது இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டில் தமிழினத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் 64வது நாயனாராக 'சொல்லடி நாயனார்' என அறிவிக்கப்பட்டதற்கு தருகின்ற விளக்கம்.**

"........சித்தர்கள் இந்துமதத்தை முறையாக முழுமையாகப் படைத்திருக்கிறார்கள் என்ற பேருண்மையினை விளக்குவனவாகத்தான் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், நவநாதங்கள், பதினெண் சித்தங்கள், நாற்பத்தெட்டு அருட்கலைகள், அறுபத்து நான்கு ஆயகலைகள், ஒன்பது கடவுட்கலைகள், ஒன்பது தெய்வீகக் கலைகள், ஒன்பது பேய்க்கலைகள், ஒன்பது நோய்க்கலைகள், ஒன்பது தேய்கலைகள், தொண்ணூற்றாறு வகை வழிபாட்டு நிலையங்கள், நாற்பத்தெட்டு வகை அருட்பட்டங்கள், எண்ணற்ற வகையான சாத்திறங்கள், சாத்திரங்கள், சாத்தரங்கள், தோத்திறங்கள், தோத்திரங்கள், தோத்தரங்கள், சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள், திருமந்திறங்கள், திருமந்திரங்கள், திருமந்தரங்கள், தந்திறங்கள், தந்திரங்கள், தந்தரங்கள், எந்திறங்கள், எந்திரங்கள், எந்தரங்கள், நிடதங்கள், துணைநிடதங்கள், இணை நிடதங்கள், காயந்திரிகள், பிறமணங்கள் [பிரமணங்கள் = பாட வேறுபாடுள்ளது], பிறணவங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், மாந்தர மாந்தரீகங்கள், தாந்தர தாந்தரீகங்கள், ஏந்தர ஏந்தரீகங்கள், அருள்வாக்குகள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள், குருவாக்குகள், குருவாசகங்கள், கருவாக்குகள், கருவாசகங்கள், திருவாக்குகள், திருவாசகங்கள், நேத்தரம், நேத்திறம், நேத்திரம், நேமம், நியமம், நிட்டை, ....... எண்ணற்ற கோடி

சம்பிறதாயங்கள், சடங்குகள், மரபுகள், சட்டதிட்டக் கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள், ………. முதலியவை படைக்கப் பட்டிருக்கின்றது.

இவற்றின் நேரடி வாரிசுகளாக உலகம் முழுதும் சித்தர்களின் வாரிசுகள், விந்து வழி வாரிசுகள், குருவழி வாரிசுகள் காலங்கள் தோறும் தோன்றிக் கொண்டுள்ளார்கள். ஏனென்றால், சித்தர்கள் உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தே வாழ்ந்திடும் வழக்காற்றினை உடையவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இவர்கள், ஆங்காங்கே அங்கவியல் நிறைவுக்குரிய பெண்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் திருமணம் செய்து அவர்களோடு குறைந்தது 18 முதல் 48 மாதங்கள் வாழ்ந்து மேலே குறிப்பிட்ட மதச் செல்வங்களை அவர்களிடம் வழங்கி என்றென்றும் அந்தந்த வட்டார மக்கள் பெறுமாறு செய்திருக்கிறார்கள். இவற்றிற்கும் மேலாக இவர்கள் நாடு இனம் மொழி என்று வேறுபாடு கருதாமல் உலகெங்கும் தங்களுடைய விந்துவழி வாரிசுகளையும் உருவாக்கி யிருக்கிறார்கள். எனவேதன், இந்த உலகில் தோன்றிடக் கூடிய எல்லா மதங்களும், அருளாளர்களும் சித்தர் நெறி எனும் தோட்டத்தில் பூத்த மலர்களே! காய்த்த கனிகளே! என்று சித்தர்கள் அறிவிக்கின்றார்கள் …..” - குருபாரம்பரிய வாசகம்.

கி.பி. 1772-இல் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் கண்டபக் கோட்டை வாழ்ந்த சித்தர் ஏளனம்பட்டியார் எனப்படும் சித்தர் கருவூரார் உ. இராமசாமிப் பிள்ளையவர்கள் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவிக்கும் பொழுது அறிவித்த குருபாரம்பரிய வாசகங்களில் இதுவும் ஒன்று. இதனை இங்கு எடுத்துக் காட்டுவதற்குக் காரணம், சித்தர்களுக்கு மதவேறுபாடுகளோ, நாத்திக ஆத்திக வேறுபாடுகளோ இல்லை என்பதற்காகத்தான். மேலும், சித்தர் நெறிப்படி பார்த்தால் நாத்திகமும், ஆத்திகமும் ஒன்றுதான். அகஞானத்தால் தயாராகும் மெய்ஞானியும், புறஞானத்தால் தயாராகும் மெய்ஞானியும் அநுபவப் பூர்வமாகப் பார்த்தால் ஒருவரேயாவர்.

சித்தர்கள் தமிழ்மொழி வழியில் தோன்றிய “மக்கள் தொண்டர்களே” உண்மையான பத்தர்கள் என்று மதித்து அவர்கள் வணங்கிய தெய்வங்களின் அடிப்படையில் “நாயனார்”, ஆழ்வார், அடிகள், வள்ளல்கள், ஞானிகள், முனிவர்கள், இருடிகள்,………. என்று பகுத்துப் பகுத்துப் பாராட்டியிருக்கிறார்கள். இதுபற்றி மிகத் தெளிவான எழுதாக்கிளவி நூல்கள் நிறைய உள்ளன, எழுதப்பட்டு பாரம்பரியமாகப் பாதுகாக்கப்படும் நூல்களும் உள்ளன.

---------------------------------

## அணிந்துரை
## (பிறமாச்சாரியார்)

சொல்லடி நாயனார் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் “ஓர் ஆத்திகத் தலைவரே; மத மறுமலர்ச்சிக்கும் பாடுபட்ட ஆன்மீக வாதியே; ஆரிய வருகையால் உண்மையான இந்துமதம் மடமைக்குரிய, மூடநம்பிக்கைக்குரிய, புரட்டுகளுக்குரிய, முதலாளித்துவத்திற்குரிய, சுரண்டலுக்குரிய, கேலிக்குரிய, கிண்டலுக்குரிய …. …. … ஒன்றாக மாறிவிட்டது என்பதை விளக்கியுரைத்து மக்களை ஒன்று திரட்டிய சீர்திருத்தவாதியே. சமசுக்கிருத ஆட்சியால் சமசுக்கிருதமே தேவமொழி என்று கூறியும் கூறாமலும் செயல்பட்டு வரும் வட ஆரியர்களான பிருமணர்களின் திட்டமிட்ட சதியால் தமிழர்கள் தன்னுரிமையை தன்னுடைய நாட்டிலேயே இழந்து ஒற்றுமையின்றி பிறருக்கு அடிமைகளாய், கூலிகளாய், கங்காணிகளாய் வாழ்கின்ற அவலக் கேவல நிலையை எடுத்துக் கூறிச் செயல்பட்ட சிந்தனைவாதியே” ……… என்ற அரிய பெரிய பேருண்மைகளை இந்நூலைப் படிக்கும் அனைவரும் உணர்வார்கள்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் கடவுளை மறுத்தார், வெறுத்தார், ஒதுக்கினார், தாக்கினார். எனவே, அவர் மத விரோதி, தமிழினத் துரோகி………. என்றெல்லாம் பலர் ஆராயாமல் சிந்திக்காமல் கூறி வருகின்றார்கள். ஆனால் அவருடைய பகுத்தறிவு மிகு செயல்களை நாம் சற்று ஆழமாக ஆராய்ந்து நோக்கினால் மேலே இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. பற்றிக் கூறிய கருத்துக்கள், வெளியிட்ட அறிவிப்புகள், கொடுத்த பட்டங்கள் யாவும் உண்மையே! ஏற்றுக்கொள்ளக் கூடியதே! என்பதை உணரலாம்.

1. ஆரம்பக் காலத்தில் தமிழகத்தில், மூன்று சதவீதமாக இருந்து வந்த ‘பிறமண்ணினரான பிருமணர்களை மையமாக வைத்துத் தமிழர்கள் தங்களுக்கு ‘பிருமணர் அல்லாதோர் சங்கம் (Non Brahmin Association) எனத் துவக்கியதைக் கண்டித்து பெரியார் ஈ.வெ.ரா. ‘சுயமரியாதைச் சங்கம்’ என்ற ஒன்றைத் துவக்கி அதன் மூலம் தமிழனுக்குத் தன்மான உணர்வை ஊட்டினார்.
2. பெரியார் ஈ.வெ.ரா.தான், தமிழர்களின்

வாழ்க்கையில் அனைத்துத் துறைகளிலும் பிறமண்ணினரான பிரமணர்கள் தலைமையேற்று வழிநடத்துவதால்தான் தமிழினம் பார்ப்பானிடம் தலைகுனிந்து கிடக்கின்றது. அவனைச் சுரண்டும்படி அனுமதிக்கின்றது - என்று துணிந்து கூறித் தமிழர்கள் அனைவரும் அருளாளர்களாக, அருட்சகர்களாக, பூசாறிகளாக ...... மாற வேண்டும். அனைவரும் கோயிலின் கருவறைக்குள் செல்ல வேண்டும். தமிழன்தான் மதத் தலைமையை ஏற்க வேண்டும்.......... என்று கூறினார்.

3.பெரியார் ஈ.வெ.ரா.தான் ஆரியர்களின் கற்பனையால், பொருளற்ற சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளால் இந்து மதம் பலத்த கேலிக்கும் கிண்டலுக்கும், சுரண்டலுக்கும், மடமைக்கும், மற்ற சமுதாய நலக் கேடுகளுக்கும் உரியதொன்றாக மாறிவிட்டது. கோயில்கள், பிறமண்ணினரான பிரமணர்களின் கொட்டங்களுக்கும், கொள்ளைகளுக்கும் உரியதொன்றாக மாறிவிட்டதால் பாழ்பட்டு விட்டது. தமிழன்றி செத்துப்போன சமசுக்கிருத மொழியில் மந்திரங்களைச் சொல்வதால் யாதொரு பயனுமில்லை.......... என விளக்கியதோடு மட்டுமல்லாமல், கோயில்களை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும், கோயில்களின் கணக்குகளைப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும், தமிழ் மொழியில்தான் அருட்சினை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

4.ஆரியர்களால் மாசுபடுத்தப் பட்டுவிட்ட இந்துமதத்தை மட்டுமே பெரியார் தாக்கினார், கிண்டல் செய்தார்; ஆரியர்களால் புனைந்துரைக்கப்பட்ட கட்டுக்கதைகள் நிரம்பிய புராண இதிகாசங்களை நகையாடினார் என்பதுதான் உண்மை! உண்மை! உண்மை!!! ....... ஆனால் இங்கர்சாலும் மார்க்சும் அனைத்து மதங்களையும் தாக்கியது போல் இவர் அனைத்து மதங்களையும் தாக்க வில்லை. இது உண்மையான இந்துமதத்தின் மீது அவருக்கு இருந்த அளவற்றப் பற்றையும் பாசத்தையும் காட்டுகின்றது. எனவேதான் பெரியார் ஈ.வெ.ரா. தமிழர்கள் தங்களுடைய உண்மை மதிப்பை உணர்ந்து வீறுகொண்டெழுந்து இந்துமத ஆலயங்களை சீரமைக்க வேண்டும்; மீண்டும் தமிழ் மொழியை எல்லா ஆலயங்களிலும் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ் முன்னோர்கள் செதுக்கி வைத்துவிட்டுச் சென்றிருக்கும் சிலைகளை உடைக்காமல் தானே “பிள்ளையார்” சிலைகளைச் செய்து உடைத்தெறிந்தார். இந்நிகழ்ச்சியே அவரின் பத்தியுணர்வை வெளிப்படுத்துகின்றது.

5.பெரியார் இந்தி மொழியின் ஆட்சியை எதிர்த்ததால்தான் இந்தி மொழி வெறியர்களின் ஆட்சியிலிருந்து தமிழகத்தை முழுமையாக மீட்டுத்தர முடிந்தது. இந்த மாபெரும் பணியின் மூலம் ‘தமிழன் ஒவ்வொருவனும் தன்னை - தன்னுடைய பாரம்பரியத்தை உணர வேண்டும்; பிறமண்ணினரான பிரமணர்களின் ஆதிக்கத்தை அறிய வேண்டும்; தலைவனில்லாமல் நாதியற்றுக் கிடக்கின்ற தமிழகத்தின் நிலையைப் புரிய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஆனால் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமையையேற்று வழிநடத்தி வரும் இந்துமதத் தந்தை குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள், பெரியார் ஈ.வெ.ரா. விட்டுச் சென்றுள்ள மாபெரும் போர்க்காலப் பணிகளை அணிதிரட்டிச் செயல்பட அனைத்துத் தமிழக மக்களுக்கும் மேற்கூறிய சிந்தனைகளை வழங்கி வருகின்றார்.

பதினெண் சித்தர்கள் அருட்கொடையாக வழங்கிச் சென்றிருக்கும் தமிழ் மந்திரங்களை, அருட்கலைகளை, சமுதாய நெறிமுறைகளைக் கற்றுத் தேர்ந்து அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதன் மூலம்தான் நாம் வாழ்க்கையில் சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலிருந்தும் முழுமையாக வடஆரிய மாயைகளையும், ஏமாற்றுகளையும், தவறுகளையும், சூழ்ச்சிகளையும், அண்டப்புளுகுகளையும், ஆபாசக் கற்பனைகளையும், ஆகாயாப் பொய்களையும், காட்டுமிராண்டித்தனங்களையும், ... ..... அகற்றித் தன்மான உணர்வோடு செயல்பட வேண்டும்.

சமய - சமுதாய - அரசியல் - கலை - இலக்கிய - தொழில் துறைகள் அனைத்திலும் தமிழர்களும் தமிழ்மொழியும், தமிழுணர்வும் முதன்மை பெற்று செல்வாக்கு பெற்று ஆட்சி பெறக்கூடிய நிலையை உருவாக்க பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்குப் பின்னால் நாங்கள்தான் பாடுபடுகின்றோம். எங்களால்தான் இந்த நாட்டின் சமயத் துறையிலுள்ள கறைகள் மட்டுமல்லாது சமுதாயத்திலுள்ள வறுமை, மிடிமை, இல்லாமை, இயலாமை, ஏக்கம், தேக்கம், வீக்கம், சுரண்டல், சாதிக் கொடுமைகள், தீண்டாமைகள், வேறுபாடுகள், மாறுபாடுகள், பகைமைகள்........ முதலிய அனைத்துக் குறைபாடுகளையும் முழுமையாக அகற்ற முடியும். ஏனெனில், பதினெண் சித்தர்கள் வகுத்துத் தந்துவிட்டுச் சென்றுள்ள ‘சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ அமைக்கும் வாக்குகளும், வாசகங்களும் எங்களிடம்தான் உள்ளன. இவற்றை முறையாகவும்,

முழுமையாகவும் செயல்படுத்தும் வண்ணமாகத்தான் இ.ம.இ.யின் கௌரவத் தலைவராகப் பெரியார் ஈ.வெ.ரா.வை ஏற்றுக் கொண்டோம்.

இனியாவது தமிழகத்தை முழுமையாக வட ஆரியரான பார்ப்பனர்களின் பிடிகளிலிருந்தும்; நயவஞ்சகச் சூழ்ச்சி வலையிலிருந்தும் விடுவிக்கும் இம்மாபெரும் பணியில் தோளோடு தோளாக நின்று போராட தமிழ்மொழி, இன, நாட்டுப் பற்றுளர்களும், இளைஞர்களும், திராவிடக் கழகத்தவரும், பகுத்தறிவாளர்களும், நாத்திகர்களும், ஆத்திகர்களும், அறிவாளர்களும் தங்களின் மேலான ஆதரவுகளை எல்லா வகையிலும் தருவார்களாக!

அன்பு
தலைமைப் பொறுப்பாளர்

---

பெரியார் ஈ.வெ.ரா.வே கூறியுள்ளார் தான் நாத்திகர் அல்ல என்று.

பெரியார் ஈ.வெ.ரா. ஓர் ஆத்திகரே.

**14-12-1947இல் திருவண்ணாமலை திராவிடர் கழக மாநாட்டில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் பேசிய பேச்சிலிருந்து (சொற்பொழிவு) எடுக்கப்பட்ட வாசகம்.**

"......இஷ்டப்பட்டால் நீங்கள் கோயிலுக்குப் போங்கள் வேண்டாமென்று கூறவில்லை.

பக்திப்பரவசமாகி, ஆனந்தக் கூத்தாடுங்கள். அதையும் வேண்டாமென்று கூறவில்லை.

ஆனால் அந்த அழுக்குப் பிடித்த பார்ப்பனனுக்கு ஏன் தலை வணங்குகிறீர்கள்?

அவனை ஏன் தரகனாக்கிக் கொள்கிறீர்கள்?

அவனுக்கு ஏன் உங்கள் காசை அள்ளி எறிகிறீர்கள்?

அவன் மொழிக்கு ஏன் அடிமையாகு கிறீர்கள் என்றுதானே உங்களை கேட்கிறோம்.

இதுவா நாஸ்திகம்? இதுவா துவேஷம்? ..."

(ஆதாரம்: 'உண்மை' மாதமிருமுறை ஏடு 1-6-1983 பக்கம் 5)

---

# சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ.வெ.ரா.

திருச்சி மாவட்டக் கரூர் அருகிலுள்ள முடிகணம் எனப்படும் முடிகண்ட சோழபுரத்தில் வாழ்ந்த அருட்பேரரசர் காக்கா வழியன் பண்ணையாடி மருதையா பிள்ளை அவர்கள் 'கரூர்ப் பெரும்புலவர்' என்ற பட்டத்துடன் கோயம்புத்தூர், சேலம், திருச்சி, தஞ்சை, மதுரை, ... முதலிய மாவட்டங்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவர் அரசவேடம் பூண்டு (தமிழினத்தின் உண்மையான அரச பாரம்பரியத்தில் தோன்றியவர்; அருளுலகில் சித்தர் காகபுசுண்டரின் வாரிசு) பாட்டுப்பாடிக் கூத்துக்களும், நாடகங்களும் 'புராண இதிகாச மறுப்பாக' நிகழ்த்தியவர். பிருமண வெறுப்பையும் மறுப்பையும் வித்திட்டு வளர்த்தவர்.

இவரது நெடிதுயர்ந்த தோற்றமும், செம்மேனியும், இனிய குரலும், தமிழ்ப் புலமையும், ஆரம்பப்பள்ளி ஆசிரியத் தொழிலும் (திண்ணைப் பள்ளிக்கூடம், தமது பண்ணையத்துக் குடிசையில் நடத்தினார்), கூத்தாடும் தொழிலும், சித்த மருத்துவத் திறமையும், சோதிட ஆற்றலும், தத்துவ நூல், தர்க்க சாத்திரம், கணூல், தொடுகுறி, அங்கவியல், மனையியல், வரியியல், நிமித்திகம், ... முதலியவற்றில் இவருக்கிருந்த திறமையும், .. இவரை நாடறிந்த 'பெரும்புலவர்', 'சித்தர்', 'காக்கையர்' என்று புகழ் பெறச் செய்தன. இவர், தனது செயல்நிலை வாரிசாகச் சுவாமி கைவல்யத்தை உருவாக்கி; இருவரும் இணைந்தே பெரும்பாலும் சுற்றுப் பயணங்களில் ஈடுபட்டிட்டனர்.

சுவாமி கைவல்யத்தின் பொறுப்பிலே கரூர்ச் சந்தையிலே வெல்லம் விற்பதும்; கரூர் வட்டாரத்தில் மிளகாய், எள், பருத்தி முதலியன வாங்கி ஈரோட்டுச் சந்தையிலே விற்பதும் பெரும்புலவர் காக்கையர் மருதையா பிள்ளையின் பொழுது போக்குகளில் ஒன்று. ஏனெனில், வணிகத்தாலோ, கூத்து நாடகத்தாலோ, மருத்துவத்தாலோ, பிற கலைகளாலோ பொருளீட்டியவர் அல்ல முடிகணம் காக்கா வழியன் (காக்கையர் வழியினர் என்பதன் சுருக்கம்) பண்ணையாடி கரூர் பெரும்புலவர் மருதையா பிள்ளை.

ஈரோட்டு வணிகத் தொழிலால் வெங்கட்ட நாயக்கரின் மண்டியில் வாடிக்கையாளர்களாக மாறிய மருதையா பிள்ளையும், அவரின் நண்பர் கைவல்ய சாமியாரும் (சுவாமி கைவல்யம் என்றே அனைவராலும் இவர் மரியாதையுடன் அழைக்கப் பட்டார்) தங்களது வேடிக்கைப் பேச்சால் வெங்கட்ட நாயக்கரின் குடும்ப நண்பரானார்கள். ஆண்டு தோறும் சோழியாயி கோயில் (கரூர்ச் சோழமாதேவி, நத்தமேடு சோழியாயி - இதுவே சோழப்பேரரசுகள் பிறப்பதற்குக் கருவாக இருந்த இடம். இதனால்தான் அருகிலுருவான

சோழத் தலைநகர் கரூர் எனப் பெயர் பெற்றது) திருவிழாவுக்கு வெங்கட்ட நாயக்கர் குடும்பத்தார் வருவதும்; நன்கொடைகள் வழங்குவதும் ஈரோட்டுக் காவிரிக்கரையையும், கரூரின் அமராவதி ஆற்றங்கரையையும் இணைத்தது.

அதாவது வெங்கட்ட நாயக்கரின் இளைய மகன் பெயரில் 'ஈ.வெ.இராமசாமி நாயக்கர் மண்டி' என்ற வணிகநிலையம் ஈரோட்டில் புகழ் பெற ஆரம்பித்ததுடன்; கரூர்ப் பெரும்புலவர் மருதையா பிள்ளையும், அவரது தத்துவத் தயாரிப்பான சுவாமி கைவல்யமும் காவிரிக்கரை ஈ.வெ.இராமசாமியை அமராவதிக் கரைக்கு வரவழைத்துச் சித்தர் நெறிச் செல்வராகத் தயாரித்தனர். பெரும்பாலும் இருவரில் ஒருவர் ஈரோட்டில் தங்கி ஈ.வெ.இராமசாமியைத் தயாரிக்கலானார்கள்.

ஒரு திருமண விழாவில் ஈ.வெ.இராமசாமி உட்கார்ந்திருந்த பந்தியிலிருந்து பிருமணன் ஒருவன் அவரை எழுப்பிச் "சூத்திரன் உட்காரக் கூடாது. அது பிருமணர்க்குரிய பந்தி. வெளியே போய் உட்கார்... ..." என்று சொன்னவுடன் அருகிலிருந்த சுவாமி கைவல்யம் அந்தப் பிருமணனைக் கீழே தள்ளி அடியும் உதையும் கொடுத்தார். ஈ.வெ.இராமசாமி சண்டையை விலக்க வெளியே கைவல்ய சாமியாரை அழைத்து வந்து; "நாம் பிருமணாள் சாப்பிடற இடத்திலே உட்கார்ந்ததுதான் தவறு. நீங்க சாமியாரே இப்படி பிருமணாளை அடிக்கலாமா?" என்று கேட்டார். அப்பொழுதுதான் சுவாமி கைவல்யம், "... இராமசாமி!, உன் தந்தையோ, தாயோ, அந்தப் பிருமணன் சொன்னதை நல்ல வேளை கேட்கவில்லை. அவன் உன்னைத் தாசிமகன், தேவடியாள் மகன், அடிமை வேலை செய்யப் பிறந்த கீழ்மகன் ... என்று திட்டினான். அது உனக்குப் புரியவில்லை. இல்லாவிட்டால், அந்தப் பிருமணன் உன்னைச் சூத்திரன் என்று சொல்லியவுடனே நீயே அவனைக் கொன்றிருப்பாய். பிச்சையெடுத்துப் பிழைக்கும் இந்தப் பிருமணன் உன்னைத் திட்டியதைக் கேட்டுக் கொண்டு சும்மாயிருந்தால் என்னை மருதையா பிள்ளை தயாரித்ததற்குப் பயனே இல்லாமல் போயிருக்கும் ..." என்று குமுறினார்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஈ.வெ.இராமசாமிக்குப் பிருமணர் 'சூத்திரர்' என்ற சொல்லால் அனைவரையும் தாசிமகன், தேவடியாள் மகன், அடிமை ... என்பது புரிந்து பிருமணர் மேல் வெறுப்பு வளர்ந்தது. அந்த வெறுப்பைக் கரூர் அமராவதி ஆற்றங்கரையில் மருதையாபிள்ளையின் புலமையும், சுவாமி கைவல்யத்தின் தர்க்க சாத்திர அறிவும் உரமிட்டுக் களை பறித்து வளமாக வளர்த்தன. 'பிருமணரின் வேத மதத்தின் மாயைகளையும், பொய்களையும், ஆபாசங்களையும், ஏமாற்றுக்களையும், சுரண்டல்களையும் ஒழித்தால்தான் தமிழனின் மானம், மரியாதை, உரிமை, பெருமை, வாழ்வு, ... முதலிய அனைத்துமே பிழைக்கும் தழைக்கும் என்ற சித்தர் நெறியின் வாரிசாக ஈ.வெ.இராமசாமியைத் தயாரித்தவர்கள் காகபுசுண்டர் கரூர் பெரும்புலவர் மருதையா பிள்ளையும் அவர் நண்பர் சுவாமி கைவல்யமுமேயாகும். எனவேதான், பொது வாழ்விலிருந்து ஒதுங்கி வாழும் நான், 'சித்தர் நெறிச் செல்வரே பெரியார் ஈ.வெ.ரா.' என்ற பேருண்மையை விளக்கி அவரை இ.ம.இ.யின் கௌரவத் தலைவராக்கப் பரிந்துரைக்கிறேன்.

**<u>- காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமிபிள்ளை, இ.ம.இ.யின் இரண்டாவது பாரம்பரியத் தலைவர்.</u>**

---

# இந்துமதம் பற்றிய குருபாரம்பரிய வாசகம்

[கி.மு 70இல் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள பசுபதி ஈசுவரர் ஆலயத்தைக் கட்டிய 10வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள் பதினெண்சித்தர்களுடைய "சீவநெறி"யான "சித்தர் நெறி" எனும் இந்துமதத்தை ஏறத்தாழ நான்கு யுகங்கள் கடந்து மீண்டும் மக்களுக்குக் கருத்து விளக்கச் சுருக்க வாசகங்கள்; நீண்ட விரிவுரைகள்; கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம், திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம், அருள்வாக்கு, அருள்வாக்கியம், அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம் எனும் 18 வகையான நூல்களின் மூலமும்; வாழையடி வாழயாக ஒவ்வொரு பீடாதிபதியும் மரபு வழியாகத் தொடர்ந்து எழுதும் குருபாரம்பரியம் எனும் மதவரலாற்று தொடர் நூலின் மூலமும் விளக்கங்கள் கொடுக்க ஆரம்பித்தார்]

"இந்துமதம் என்பது வெறும் வரலாறு மட்டுமல்ல! புராண இதிகாசங்கள் மட்டுமல்ல! கதைகளை மட்டும் கொண்டதல்ல! அற்புதங்களைச்

செய்த சித்து விளையாடல்காரர்களால் உருவாக்கப்பட்டது அல்ல! மந்திர மாயங்களால் உருவாக்கப் பட்டது அல்ல! நரகத்தைக் காட்டி அச்சுறுத்தியும், சொர்க்கத்தைக் காட்டி இச்சுறுத்தியும் பிறந்ததல்ல! வளர்ந்ததல்ல! வாழ்ந்ததல்ல! புரியாத மொழிகளில் தெரியாதவைகளைக் கூறி மக்களைக் குருடராக்கிடும் பணியில் ஈடுபட்டதல்ல! மூடநம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டதல்ல! எந்தத் தனியொரு திருத்தோன்றலையோ (அவதாரங்கள்) அடிப்படையாகக் கொண்டதல்ல! எந்த ஒரு தனிப்பட்ட நூலாலும் அல்லது வேதத்தாலும் வாழ்வதல்ல! எந்த ஒரு தனிப்பட்ட கடவுளையோ, கோயிலையோ புகழ்ந்து வாழுவதல்ல! வளருவதல்ல! அது முழுக்க முழுக்க தத்துவ ஞானிகளையும், தத்துவங்களையும் (The philosophers and the Philosophies), சித்தாந்திகளையும், சித்தாந்தங்களையும் (The Theologists and the Theologies), வேதாந்திகளையும், வேதங்களையும், (The Vedics and the Vedas), விஞ்ஞானிகளையும், விஞ்ஞானங்களையும் (The Scientists and the Sciences), கலைஞர்களையும், கலைகளையும் (The Artists and the Arts), அருளாளர்களையும், அருள்துறைகளையும் (The Divinators and the Divine Fields), கோயில்களையும், கோயில் விஞ்ஞானங்களையும் (The Temples and the Temple Sciences), இவற்றிற் கெல்லாம் மேலாக கணக்கற்ற கோடிக் கணக்கான தேவர்கள், தேவியர்கள், தேவதைகள், கடவுள்கள், தெய்வங்கள், ஆண்டவர்கள், பட்டவர்கள், எல்லாக்கள், இயவுள்கள், இறைகள், ........ என்று பட்டியலிட முடியாத அருளுலகத்தவர்களையும் வகைவகையாகக் கொண்டு, 1359 அண்டபேரண்டங்களிலும் பரவி இருப்பதுதான் இந்துமதம்....... . அதாவது ஏட்டறிவின் மூலம் மட்டும் இந்துமதத்தை அறிந்து கொள்ள முடியாது, குருவழியாகப் பெறக்கூடிய பட்டறிவாலும், தானே பெறக் கூடிய பயிற்சிகளாலும்தான் இந்து மதத்தைப் படிப்படியாக உணர முடியும்! உணரமுடியும்!! உணரமுடியும்!!!"

இதுதான் 10வது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரூரின் குருபாரம்பரிய வாசகம்.

தலைவர், குருதேவர், ஞானச்சாரியார்,
இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரூர்

## குருதேவர் அறிவித்த "அருட்போர்" என்பதற்கு குருதேவரே தமது 58வது பிறந்தநாள் செய்தியில் கொடுத்த விளக்கம்:

அருட்போர் என்பது அருளுலகத்தில் உள்ள இருள்களை, தவறான கற்பனைகளை, தவறான பழக்க வழக்கங்களை காலப் போக்கில் உருவாகிவிட்ட மடமைகளை, அறியாமைகளை, புரியாமைகளை, தவறுகளை, பயனற்றவைகளை, கண்மூடிப் போக்குகளை, மூட நோக்குகளை, ஏமாளிச் செயல்களை, எதார்த்த வாதங்களை, அடிமை உணர்வுகளை, அன்னிய மதங்களுக்கும் வேதங்களுக்கும் வேலியாக செயல்படும் கூலிநிலைகளை, நாத்திகத்தின் பெயராலும், பகுத்தறிவின் பெயராலும், சீர்திருத்தத்தின் பெயராலும் சுயநல வெறியர்கள் செய்கின்ற இந்துவேத, இந்துமதத் துரோக விரோதச் செயல்களை, முறையாக இந்துவேத, இந்துமத ஏட்டறிவும், பட்டறிவும் இல்லாமையால் விளைகின்ற இந்துமதப் போலி வாழ்வியல்களை, சாதிசமய ஏற்றத்தாழ்வு வெறிகளாலும், தீண்டாமைக் கொடுமைகளாலும், இந்துக்களிடையே ஏற்பட்டிட்ட ஒற்றுமை யின்மைகள், போட்டாப்போட்டிகளை, சண்டை சச்சரவுகளை, கலக்கங்களை, கவலைகளை, இழிவுகளை, அழிவுகளை ... எல்லாம் அகற்றுவதற்காக; இந்துக்களிடையில் நிகழப் போவதொன்றுதான்! இந்துக்களிடையில் நிகழப் போவதொன்றுதான்! இந்துக்களிடையில் நிகழப் போவதொன்றுதான்! இந்துக்களிடையில் நிகழ்த்தப் படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப் படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப் படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப்படப் போவதொன்றுதான்! நிகழ்த்தப் படப் போவதொன்றுதான்! .... என்ற பேருண்மையினை முதலில், முதலில், முதலில் நம்மவர்கள் முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! நிறைவாகப் புரிந்து கொள்ள வேண்டும்! நிறைவாகப் புரிந்து கொள்ள வேண்டும்! நிறைவாகப் புரிந்து கொள்ள வேண்டும்! ஏனெனில், நம்மவர்களில் பலர் நாம் திரட்டுகின்ற அருட்படை, அருட்சேனை வேற்று மதங்களோடும், மாற்று வேதங்களோடும் போராடிடப் போகிறது! போரிடப் போகிறது!? போராடிடப் போகிறது! போரிடப் போகிறது!? போராடிடப் போகிறது!

போரிடப் போகிறது!? என்ற தவறான உணர்விலும், கருத்திலும், நோக்கிலும், போக்கிலும், ஊக்கிலும் வாழுகிறார்கள்! வாழுகிறார்கள்! வாழுகிறார்கள்! இந்த மாபெரும் தவறை உடனடியாக அகற்றியாக வேண்டும். இந்த மாபெரும் தவறை உடனடியாக அகற்றியாக வேண்டும்! இந்த மாபெரும் தவறை உடனடியாக அகற்றியாக வேண்டும்!... ... ...



**தன்னை உணர்ந்தவன் உலகையும் அண்டத்தையும் உணர்வான்**
**தன்னை யறிந்தவனே மண்ணையும் விண்ணையும் அறிந்திடுவான்**
**தன்னை வென்று உயர்பவர் மண்ணையும் பொன்னாக்கிடுவர்**
**நல்லவனாக மட்டும் இருந்திடாமல் வல்லவனாகவும் இருக்க வேண்டும்**
**கடவுள் நமக்கு முதலாளி அல்ல; நமக்குச் சேவகனே ஆவார்**
**கடவுள் நமக்குத் தலைவரல்லர்; தொண்டராவார்**
**நாம் கடவுளுக்குப் பணிபுரிபவரல்லர்; கடவுள் நமக்குப் பணிபுரிபவர்**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**



**BOOK POST**

**To**

**If undelivered please return to:**

Forum of Siddharadiyaans
C/O Mr V.Muniraju
Survey No: 34, Door No. 345
Outer Ring Road, Bellandur Post,
Bangalore East - 560103
Cell: 09972130609